தினமலர் 18/7/2019

# கல்வி நிறுவனங்களுக்கு யு.ஜி.சி., அறிவுறுத்தல்

**திருப்பூர், ஜூலை 18–**

உயர்கல்வி நிறுவனத்தினர், தங்கள் விவரங்களை, உரிய தகவல்களுடன், இணையதளத்தில் பதிய, பல்கலை மானியக் குழு(யு.ஜி.சி.,) அறிவுறுத்தியுள்ளது.

யு.ஜி.சி., சார்பில், அனைத்து பல்கலைகளின் பதிவாளர்களுக்கு, நேற்று அனுப்பிய சுற்றறிக்கையில், 'யு.ஜி.சி., கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, உயர் கல்வி நிறுவனத்தினர், தங்கள் இணையதளங்களில், தங்கள் நிறுவனங்கள் குறித்த ஆவணங்கள், புகைப்படங்கள், வீடியோக்கள் மற்றும் ஜியோடேக்குடன் உரிய தகவல்களை பதிவு செய்ய வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.